**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: ohararm@state.gov ● http://lk.usembassy.gov

வெளியீட்டு இல. 20170825T

**இலங்கையானது மேம்பட்ட முறையில் அபாயகரமான சரக்குகளை கண்காணிப்பு ஆய்வு செய்ய அமெரிக்க தூதரகம் சுங்க அதிகாரிகளுக்குப் பயிற்சி**

**கொழும்பு, ஆகஸ்ட் 25:** ஐக்கிய அமெரிக்க ஏற்றுமதிக் கட்டுப்பாடு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களம் (EXBS) ஆகஸ்ட் 21, 2017 முதல் ஆகஸ்ட் 25, 2017 வரை - 33 சுங்க அதிகாரிகளுக்கு, சரக்குகளுக்கான அபாய நேர்வு முகாமைத்துவம் பற்றிய பயிற்சி வழங்கியது. இப்பயிற்சி இலங்கையில் நடாத்தப்பட்டதுடன் EXBS இதற்கான ஒழுங்கமைப்புக்களைச் செய்திருந்தது.

பங்குபற்றிய பயிற்சியாளர்கள் அதி-ஆபத்துள்ள பரிமாற்றப் பண்டங்களை கண்டறிதல் மற்றும் ஆவண ஆய்வு செய்தல் மூலம் சந்தேகமான சரக்குகளை குறித்து நோக்கும் முறையையும் கற்றுக் கொண்டார்கள். சுங்க அமைப்புக்கள் தம் நாட்டுக்கு உள்வரும், வெளியேறும், கடந்து செல்லும் சரக்குகளை கண்காணிப்பு ஆய்வு செய்ய வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டிருப்பதுடன், நாட்டின் பாதுகாப்பிற்கும் பொதுமக்கள் பாதுகாப்பிற்கும் பங்கம் விளைவிக்கக் கூடிய ஆபத்தாகக் கருதப்படக்கூடிய சரக்குகளை மதிப்பீடு செய்யக் கூடிய உறுதியான முறைகளை இப்பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றியவர்கள் உள்வாங்கிக் கொண்டனர். மேலதிக நேரடிச் சோதனை முறைகள் தேவையான சரக்குகளை, கண்காணிப்பு ஆய்வு மூலம் இனங்காண்பதில் இவர்கள் மேம்பட்ட திறனை பெற்றுக்கொண்டுள்ளனர்.

EXBS ஆனது பேரழிவு ஆயுதங்கள் பெருகுதல் மற்றும் மரபு ரீதியான ஆயுதங்கள் மூலம் பிராந்திய சமாதானம் மற்றும் ஸ்திரதன்மைக்கு ஆபத்து ஏற்படுத்துவதை தடுப்பதற்கு முயன்று வருகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட பெருகும்தகவற்ற மூலோபாய வர்த்தக கட்டுப்பாட்டு உதவி நிகழ்ச்சித் திட்டம், இணக்க அனுமதி மற்றும் சட்ட/ஒழுங்கமைப்பு தொழில்நுட்ப உதவி, அத்துடன் கடற் பாதுகாப்பு, எல்லைப்பாதுகாப்பு, சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு உபகரணங்கள் வழங்கல் மற்றும் பயிற்சியளித்தல் ஆகியவற்றை EXBS நிகழ்ச்சித்திட்டமானது கொண்டுள்ளது.

# # #